

# பனிமயம்

## ஜூன் 2025

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-



# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...

அன்பு மக்களே, வணக்கம். நலந்தானா?

மே மாதம் வணக்க மாதம். மே மாதம் முழுவதும் மாதாவை மகிமைப் படுத்திய நாம் இயேசுவின் திரு இருதயத்திற்கென்று அர்ப்பணிக்கப்பட்டிருக்கும் ஜூன் மாதத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். இயேசுவின் திரு இருதயமே! என் நம்பிக்கையை எல்லாம் உமது பேரில் வைக்கிறேன் என்று அடிக்கடி மனவல்லிய ஜெபமாக இச்செபத்தை ஜெபிப்போம். இயேசுவின் திரு இருதயத்திற்கு எதிராக நாமும் உலகினரும் செய்யும் நிந்தைகளுக்காக பரிகாரங்கள் செய்வோம். அளவு கடந்த விதமாய் நம்மை நேசிக்கும் இயேசுவின் திரு இருதயத்தையும், பிற மனிதர்களையும் நாம் நேசிப்போம்.

“இயற்கையில் இறைவனைக் காண்போம்” என்னும் சிந்தனையோடு இம்மாதத்திற்குள் அடியெடுத்து வைப்போம். இயற்கை இறைவனால் நமக்குத் தரப்பட்டிருக்கும் மிகப்பெரிய கொடையாகும். படைப்பின் தொடக்கத்தில் கடவுள் இயற்கையை படைத்து அதனை “ஆளுங்கள்” என்று சொன்னாரே தவிர “அழியுங்கள்” என்று சொல்லவில்லை. ஆனால் இன்று மனிதன் தன் சுயநலத்தால் ஆளவும் செய்கிறான், அழிக்கவும் செய்கிறான். இன்று நாம் அனுபவிப்பது எல்லாம் நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்றது. அதை நாம் அனுபவித்து விட்டு நமது சந்ததியினருக்கும் கொடுக்க வேண்டியது நம் கடமையாகும்.

நில வளங்கள், நீர் வளங்கள், வன வளங்கள், மண் வளங்கள், மலை வளங்கள், கனிம வளங்கள் என்று எல்லா வளங்களையும் மனிதன் சூரையாடிக் கொண்டிருக்கிறான் என்பது தான் உண்மை. ஒவ்வொருவரும் ஒரு சிறு முயற்சி எடுத்தால் நாம் நம் இயற்கையை பாதுகாக்கவும் முடியும், உருவாக்கவும் முடியும்,நம் வருங்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்லவும் முடியும். கடவுள் வாழ்வது ஆலயத்தில் மட்டும் என்று எண்ணாமல் அகிலம் முழுவதிலும் அவர் வாழ்கிறார் என்பதை உணர்ந்து இயற்கையில் இறைவனைக் காண்போம், நேசிப்போம்.

God Bless You All.

அன்பும், ஆசீரும்



**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை

உதயம் 26 தாரகை 10

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### உலகம் இரக்கத்தில் வளர்ந்திட

நாம் ஒவ்வொருவரும் இயேசுவுடனான தனிப்பட்ட உறவில் ஆறுதல் காணவும், உலகின் மீது நாம் இரக்கம் கொள்ள அவரது இதயத்தில் இருந்து கற்றுக்கொள்ளவும் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . . . 4
அருள்பணி. குமார்ராஜா

2. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் . . . . . . . . 6
கலாபன் வாஸ்

3. இயற்கையில் உறைந்திடும் இறைவன் . . . . . . . 8
முனைவர் சி. ஜாக்சன்

4. இயற்கையோடு உறவாடி, இறையருளைப் பெறுக!. . . . . . . . . . . . . . 10
ரோஸ் சேவியர்

5. விசா ப்ளீஸ், மோட்சம் செல்ல! . . . . . . . . . . . . 12
ம. வெனான்சியுஸ்

6. முதுமையைக் கொண்டாடுவோம் . . . . . . . . . . 14
M. பவுல் ராஜ்

6. மாசு படிந்த பூமி . . . . . . . . . . . . . . . . . . . . . . 16
ஜோ. ரெஜினா கிரகோரி

7. வெட்கப்பட்டு போவதில்லை. . . . . . . . . . . . . . 17
S.J. சுரேஷ்

8. பனிமய சாட்சியம் . . . . . . . . . . . . . . . . . . . . . 18

9. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . . . 19

10. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . . . 22

# மரியன்னையின் திருப்பெயர்கள்



## 25 தாவீது அரசரின் கோபுரம்!

மரியன்னைக்கு வழங்கப்படும் பெயர்களில் கோபுரம் என்னும் பெயர் தனித்துவமாக விளங்குகிறது. தாவீது அரசரின் கோபுரம், தந்த மயமான கோபுரம் என இருமுறை மரியன்னை அழைக்கப்படுகிறார். மரியன்னையை ஏன் கோபுரம் என்று அழைக்கிறோம்?

கோபுரம் வலிமை மற்றும் பாதுகாப்பின் அடையாளமாக உள்ளது. முற்காலத்து அரசர்கள் தங்கள் நகர்களுக்கு வலிமை சேர்க்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் கோபுரங்கள், கொத்தளங்களை எழுப்பினர். எருசலேம் நகரில் தாவீது எழுப்பிய கோபுரங்கள் அந்நகரைப் பாதுகாக்கும் கேடயங்களாக விளங்கின. அத்துடன், தொலைவிலிருந்து பார்த்தாலே கம்பீரத் தோற்றத்துடன் அந்நகரின் வலிமையை எடுத்துரைத்து, எதிரிகளை அச்சுறுத்தின. தாவீதின் காலத்தில் எருசலேம் நகரை எவராலும் கைப்பற்ற முடியவில்லை.

மரியன்னைக்கு இந்தப் பெயர் எங்கிருந்து வந்தது? “தாவீதின் கொத்தளம்போல் அமைந்துள்ளது உன் கழுத்து” (இபா 4:4) என்னும் வரிகளிலிருந்துதான் “தாவீதின் கோபுரமே” என்னும் மரியன்னையின் சிறப்புப் பெயர் வந்துள்ளது என்கின்றனர் மரியியல் வல்லுநர்கள்.

புனித கர்தினால் ஜான் ஹென்றி நியூமன் இப்பெயரைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். தாவீது இயேசுவின் முன்னடையாளம். எனவே, தாவீதின் கோபுரம் இயேசுவின் பாதுகாப்பின் அடையாளம். மரியா குழந்தை இயேசுவை எல்லாத் தீமைகளினின்றும் பாதுகாத்ததால், அவரே தாவீதின் கோபுரம் என்கிறார் நியூமன்.

இன்னொரு வியப்பான ஒப்பீட்டையும் நியூமன் எழுதியுள்ளார். இயேசுவைப் பாதுகாத்த மரியன்னை, இயேசுவின் சீடர்களான திருஅவையையும் தொடர்ந்து பாதுகாக்கிறார் என்கிறார் நியூமன். எந்த நாடுகளிலெல்லாம் மரியன்னை வணக்கம் இருக்கிறதோ (அதாவது, பிரேசில், இத்தாலி, அர்ஜன்டைனா போன்ற கத்தோலிக்க நாடுகள்), அங்கெல்லாம் இயேசுவின்மீதுள்ள நம்பிக்கை குறையாமல் இருக்கிறது. ஆனால், எங்கெல்லாம் மரியன்னை வணக்கம் இல்லையோ, (இங்கிலாந்து, ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து போன்ற கத்தோலிக்கரல்லா நாடுகள்), அங்கெல்லாம் கிறிஸ்தவ நம்பிக்கை குறைந்துகொண்டே வருகிறது. எனவே, மரியாவே கிறிஸ்தவ நம்பிக்கையைப் பாதுகாக்கிறார். எனவே, அவரே “தாவீதின் கோபுரம்” என்பது நியூமனின் வாதம். இது சுவையான வாதமல்லவா?

எனவே, அன்னை மரியா நம்மையும் ஒரு கோபுரம்போல நின்று பாதுகாக்கிறார். உண்மையான மரியன்னை பற்று நம்மை இயேவிடமே கொண்டு சேர்க்கும். நமது இறைநம்பிக்கையையும் ஒரு கோபுரம்போல் நின்று பாதுகாக்கும் அன்னை மரியாவிடம் அடைக்கலம் புகுவோமாக! ★



# 26 தந்த மயமான கோபுரம்!

லொரெட்டோ மன்றாட்டு மாலையில் மரியா "கோபுரம்" என்று இருமுறை அழைக்கப்படுகிறார். தாவீது அரசரின் கோபுரம் என்பதைத் தொடர்ந்து "தந்த மயமான கோபுரம்" என்னும் பெயர் வருகிறது.



தந்தம் என்பது இன்று போலவே, முற்காலத்திலும் பொன்னுக்கு நிகரான மதிப்புக்குரிய ஓர் அரிய பொருளாக இருந்தது. "சாலமோனின் காலத்தில் வெள்ளியை யாரும் உயர்வாக மதிக்கவில்லை" (1 அர 10:21) என்னும் வியப்பான செய்தியை விவிலியத்தில் காண்கிறோம். எனவே, சாலமோன் "தந்தத்தினால் பெரியதோர் அரியணை செய்து அதைப் பசும்பொன்னால் வேய்ந்தார்" (1 அர 10:18).

அது தந்த மயமான அரியணை. தந்த மயமான கோபுரம் எங்கிருந்து வந்தது? இனிமைமிகு பாடல் நூலில் வரும் "உன் கழுத்து தந்தத்தாலான கொத்தளம் போன்றது" (இபா 7:4) என்னும் வரிகளிலிருந்துதான் தந்தமயமான கோபுரம் என்னும் சொல்லாடல் வந்தது என்கின்றனர் விவிலிய அறிஞர்கள். தலைவன் தன் காதலியை நோக்கிச் சொல்வதாக அமைகின்றன இந்த வரிகள். தொடர்ந்து, "உன் கண்கள் எஸ்போனின் குளங்கள் போன்றவை; பத்ரபீம் வாயிலருகே உள்ள குளங்கள் போன்றவை; உம் மூக்கு லெபனோனின் கோபுரத்திற்கு இணை; தமஸ்கு நகர் நோக்கியுள்ள கோபுரத்திற்கு இணை" (இபா 7:4) எனச் செல்கிறது இந்த வர்ணனை.

இனிமைமிகு பாடல் என்பது காதல் பாடல்களின் தொகுப்பே. இருப்பினும், முற்காலத்திலிருந்தே இந்த நூல் இறைவனுக்கும், இஸ்ரயேல் மக்களுக்கும் இடையே நிலவும் அன்புறவை எடுத்துச்சொல்கிறது என்று புரிந்து கொண்டனர் யூதர்கள். எனவேதான், இந்நூல் இன்றளவும் விவிலியத்தின் ஓர் அங்கமாக உள்ளது. இறையியல் பார்வையில் இந்நூலை அணுகும் அறிஞர்கள் இந்நூலின் சில பகுதிகள் அன்னை மரியாவுக்கும் முன்னோடியாகத் திகழ்கின்றன என்கிறார்கள். அதன்படித்தான், அன்னை மரியா தந்தமயமான கோபுரம் என்று அழைக்கப்படுகிறார்.

யானையின் தந்தம் மிகுந்த மதிப்புக்குரியது. அது தூய்மை, அழகு, மாண்பு ஆகியவற்றைக் குறிக்கின்றது. எனவே, மரியன்னையின் சிறப்பை விளக்கும் அருமையான உவமையாக மாறுகிறது. மேலும், தந்தம் வெண்மை நிறம் கொண்டது. மரியா பிறப்புநிலைப் பாவமின்றி உருவானவர் என்பதையும் இப்பெயர் சுட்டுகிறது.

இப்பெயரிலுள்ள கோபுரம் பாதுகாப்பையும், துணிவையும் குறிக்கிறது. மரியா தமது பிள்ளைகளான கிறிஸ்தவர்களை எல்லாத் தீமைகளினின்றும் பாதுகாக்கிறார். குறிப்பாக அவர்கள் இறைநம்பிக்கையை இழந்துவிடாதபடி தூணாக நிற்கிறார் என்று பொருள் காண்கின்றனர் திருமறைத் தந்தையர். சிலுவையடியில் இயேசுவின் சீடர்களைவிட அதிகத் துணிவுடன் நின்றார் மரியா என்பதையும் இப்பெயர் அடையாளப் படுத்துகிறது.



அருள்பணி. குமார்ராஜா

# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்




கத்தோலிக்கத் திருஅவையில் மறுமலர்ச்சியின் தேவை அறிந்து, திருத்தந்தை புனித 23ஆம் ஜான், 1962ஆம் ஆண்டில், 21ஆவது பொதுச் சங்கத்தைக் கூட்டினார். முன் எப்போதையும்விட அதிக அளவில், உலக நாடுகளிலிருந்து 2900 ஆயர்கள் இந்த இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தில் பங்கேற்று, புதிய கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றன.

"சாளரங்களைத் திறந்துவிடுங்கள்.... புதிய காற்று உள்ளே வரட்டும்!" - என்ற சொற்றொடரைப் பயன்படுத்தித்தான் சங்கத்தைத் தொடங்கி வைத்தார் (1962 அக்டோபர் 11ஆம் நாளில்) திருத்தந்தை 23ஆம் ஜான்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம், எந்த ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை உண்மையை வரையறுக்கவோ, தப்பறைகளைக் கண்டனம் செய்யவோ கூட்டப்படவில்லை. மாறாக, பிற கிறித்தவ அவைகளோடு உறவு ஏற்படுத்துதல், உலக சமயங்களோடும் எல்லா மக்களோடும் இன்றைய உலகோடும் உரையாடலில் ஈடுபடுதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டது இச்சங்கம். சங்கத்தின் செயல் திட்டம் திருச்சபையின் உள்வாழ்வு பற்றியும் உலகோடு திருச்சபைக்குள்ள உறவு பற்றியும் அமைந்தது. சங்கம், செயல்படுத்துமாறு அறிவித்த 16 ஏடுகளும், 20ஆம் நூற்றாண்டுத் திருஅவைக்கு வழிகாட்டும் ஒளி விளக்குகளாக அமைந்துள்ளன.

சங்கம் ஆரம்பித்து ஓராண்டுக்குப் பிறகு, திருத்தந்தை 23ஆம் ஜான் இறைவனடி சேர்ந்துவிட்டார். அவரை அடுத்து திருத்தந்தை ஆறாம் பவுல் திருச்சபையின் தலைவரானார். 1965 வரை, இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை வழிநடத்தி நிறைவு செய்தார்.

★ ★ ★

கருத்துச் சுரங்கமாக அமைந்த இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், இருபத்தைந்து ஆண்டுகளாக மக்கள் மத்தியில் பரவலாக்கப் படாமலும், கத்தோலிக்கர்களுக்குக்கூட முழுமையாகத் தெரிவிக்கப்படாமலும், அடைபட்டுக் கிடந்தன!

தமிழக ஆயர் பேரவையின் முயற்சியினால், திருச்சியில் ஒரு வாரம் பயிற்சியளித்தார்கள் அனைத்து மறைமாவட்டக் கருத்தாளர்களுக்கும்.

அதன்பிறகும் இன்றுவரை கத்தோலிக்கர்கள் பலரும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைப் பற்றியோ அச்சங்கம் வெளியிட்டுள்ள ஏடுகளைப் பற்றியோ அறியாமலிருப்பது வியப்பே!

சரி, இதுவரை 20ஆம் நூற்றாண்டு நிகழ்வைப் பார்த்தோம். இப்போது 21ஆம் நூற்றாண்டு..... இப்போதாவது எல்லாப் பொது நிலையினருக்கும், சங்க ஏடுகளில் சொல்லப் பட்டுள்ள கருத்துகள் பரிமாறப்





பட்டுள்ளனவா? அப்படி எதுவும் தெரியவில்லை!

“இது, பொதுநிலையினரின் பொற்காலம்” - என்று பறைசாற்றப்படுகிறது.... ஏன் - எதனால் - எப்படி - என்று எல்லாப் பொது நிலையினருக்கும் தெரியுமா? ‘வாய்ச் சொல் வீரரடி’ - என்ற கதைதானா?

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைத் தொடங்கிய, நிறைவு செய்த இரு திருத்தந்தையரும், இன்று திருத்தந்தை புனித 23ஆம் ஜான் - திருத்தந்தை புனித ஆறாம் பவுல் ஆகத் திருஅவையினால் போற்றப்படுகின்றனர்.

அந்தப் புனிதர்கள் வழியாக நமக்குச் சொல்லப்பட்ட மேலான கருத்துகளை, இனிமேலாவது சிறிது சிறிதாக, அடுத்த இதழிலிருந்து அறிய முற்படுவோம்.

தொடரும்...

**கலாபன் வாஸ்**



# இயற்கையில் உறைந்திடும் இறைவன்

இந்த மாதம் அக்னி நட்சத்திரம் முடிவுக்கு வரும் மாதம். கடந்த மாதம் முழுவதும் 'என்னப்பா சூரியன் இப்படி சுட்டெரிக்குது?', 'ஒவ்வொரு ஆண்டும் பூமி சூரியன் பக்கத்துல போகுதுன்னு நினைக்கிறேன்', 'வெளியே போகவே யோசனையா இருக்கு', 'தினசரி அடுப்பு மேல இருக்கிற மாதிரியே ஒரு ஃபீலிங்' இப்படிப் பல வார்த்தைகளை சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் உச்சரிக்கக் கேட்டிருப்போம். ஒவ்வொரு ஆண்டும் புவியின் வெப்பநிலை கூடிக் கொண்டே செல்கிறது. அதற்கு என்ன காரணம்?

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மனிதன் எப்போது தன்னுடைய சுயநலத்திற்காக அளவின்றி இயற்கையை சூறையாடத் துணிந்தானோ அப்போதிருந்து இயற்கையின் சமநிலைத் தன்மை குறைந்து விட்டதாக அறிவியலாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

திருவிவிலியம் நமக்கு கற்றுத் தருகிறது இயற்கை படைப்பில் நமக்கு மூத்தோர் என்று.... இறைவன் தான் படைத்தது அனைத்தும் நல்லது எனக் கண்டார் என்று சொல்லும் இறைவார்த்தைகள் இயற்கையில் உறைந்து இருக்கிற இறைவனின் சாயலை நமக்கு படம் பிடித்து காட்டுகின்றன.

*மயில் குயில் செங்கால் அன்னம்*
*வண்டு கண்ணாடி பன்றி*
*அயில் எயிற்று அரவு திங்கள்*
*ஆதவன் ஆழி கொக்கோடு*
*உயரும் விண்கமலம் பன்மூன்று*
*உறுகுணம் உடையோர் தம்மை*
*இயலுறு புவியோர் போற்றும்*
*ஈசன் என்று எண்ணலாமே!*

(விவேக சிந்தாமணி பாடல் 13)

எனும் விவேக சிந்தாமணி பாடல், நல்லவரை ஏற்று பொல்லாதவர்களை ஒதுக்கும் குணம் கொண்டது மயில் என்றும், எப்போதும் இனிமையாகப் பேசவேண்டும் என்பதற்கு அடையாளமாக அமைவது குயில் என்றும், பாலையும் தண்ணீரையும் வைத்தால் பாலை மட்டும் பிரித்தெடுக்கும் அன்னத்தைப் போல வாழ்க்கையில் நல்லவற்றைப் பகுத்து ஏற்க வேண்டும் என்றும், மற்றவர்களுக்காக இடையறாது உழைக்கும் பண்பை வண்டாகிய தேனீ எடுத்துரைக்கிறது என்றும், தனக்கு முன்னுள்ள அனைத்தையும் உள்வாங்கும் தன்மைகொண்ட கண்ணாடியைப் போல நமது வாழ்வில் வரும் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், சைவ உணவை உண்ணும் பன்றி, மகுடத்தில் இரத்தினம் உடைய பெருமை கொண்ட பாம்பு, பலனை எதிர்பார்க்காமல் அனைவருக்கும் குளிர்ச்சியான ஒளிதரும் குணம்கொண்ட நிலவு, எல்லோருக்கும் சக்தியும் பாதுகாப்பும் கொடுக்கும் சூரியன், எங்கும் பரந்து விரிந்து, பிரம்மாண்டமான தோற்றம் தரும் கடல், தொடங்கிய காரியத்தை அடையும் வரை பொறுமையுடன் காத்திருக்க வேண்டும் என்ற பண்பைக் கற்றுத்தரும் கொக்கு, எல்லாவற்றையும் தன்கீழ் வைத்திருக்கும் பெருமை கொண்ட வானம், பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அழகு கொண்ட தாமரை ஆகிய மேற்கண்ட பதிமூன்று குணங்களைப் பெற்றோர் தெய்வ இயல்புள்ளவர் என்கிறது.

நமது ஆண்டவர் இயேசுவுக்கு இயற்கையின்மீது இருந்த அன்பு சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. தனிமையில் கருக்கலில் அவர் செபித்தபோது, தந்தையாகிய இறைவன் மட்டுமல்ல இறைவன் படைத்துத் தந்த இயற்கையும் அவரோடு இருந்தது என்று இறைவார்த்தை சான்று பகர்கின்றது.



இயேசு, தான் கூறிய பல உவமைகளில் இயற்கையைப் பெரும் உதாரணமாகக் காட்டியிருக்கின்றார். விதைப்பவர், கோதுமை மணிகள், வயலில் தோன்றிய களைகள், திராட்சைச் செடி, ஆட்டுக் கொட்டில், கடுகுவிதை எனப் பல்வேறு உவமைகள் வழியாக இயேசு இறையாட்சியை அறிவிக்கின்றார். அதனை மக்களுக்கும் விளக்குகின்றார். மேலும், இயற்கையை முன்னிறுத்தி, அதிலிருந்து நாம் பல்வேறு பாடங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றார்.

எடுத்துக்காட்டாக "வானத்துப் பறவைகளை நோக்குங்கள்; அவை விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை; களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத் தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். காட்டுமலர்ச் செடிகள் எப்படி வளருகின்றன எனக் கவனியுங்கள்; அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை" (மத் 6:26-10) என பறவைகளையும் செடிகளையும் மனித வாழ்வுக்கு வற்றாத ஞானத்தை தரும் ஏடுகளாக பரிந்துரைக்கிறார்.

இன்றும் நாம் இயற்கையை உற்றுநோக்கும்போதெல்லாம் நமக்கு அது மிகப்பெரும் பிரமிப்பையும், ஆச்சரியங்களையும், அனுபவங்களையும் அள்ளித் தருகிறது. வாழ்க்கையில் நமக்கு வருகின்ற மனக் கவலைகள், வருத்தங்கள், ஏமாற்றங்கள், துயரங்கள் ஆகியவற்றை சுமந்துகொண்டு பயணிக்கும் போது, சில மணித்துளிகள் இறைவன் படைத்தளித்துள்ள இந்த இயற்கையைப் பார்க்கும்போது, அவை எல்லாமே மாயமாய் மறைந்து விடுகின்றன. அந்தளவுக்கு இயற்கை நமது மனத்தை மாற்றும் சக்தி படைத்ததாக உள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இயற்கை நமக்கு உயர்ந்த வாழ்க்கைப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கின்றது.

ஆங்கில கவிஞன் வோர்ட்ஸ்வொர்த், "புத்தகங்களைத் தூக்கி எறிந்துவிட்டு வெளியே வந்து இயற்கை இன்பத்தை அனுபவியுங்கள். வானம்பாடியின் பாட்டைக் கேளுங்கள். எல்லா முனிவர்களும் போதிக்கும் விடயங்களைவிடக் கூடுதலாக ஞானம் பெறுவீர்கள்" என்று தனது கவிதையில் வடித்துள்ளார். இப்படிப்பட்ட இயற்கையைத்தான் நாம் சுரண்டிக் கெடுக்கிறோம்.

அன்று எலியாவுக்கு பஞ்ச காலத்தில் காகம் மூலம் உணவளித்தார் இறைவன். இனி வரும் காலத்தில் பஞ்சம் வந்தால் உணவு தர இறைவன் தயாராக இருந்தாலும் காகம் கிடைக்குமா? என்பது மில்லியன் டாலர் கேள்வி. அலைபேசிகளால் சிட்டுக் குருவிகள் அருகி வரும் உயிரினங்களாக மாறியதைப் போல ஒவ்வொரு இனமாக இயற்கை தொலைத்துக் கொண்டிருக்கிறது.

நமது ஆண்டவரைப் போல இயற்கையின் தூதுவர்களாக நாமும் மாறினால் மட்டுமே இயற்கை வாழும். இயற்கையை நேசிப்பது மட்டுமல்ல, அதைப் பாதுகாப்பதும் அவசியம். இது கடமை மட்டுமல்ல, பொறுப்பும்கூட. நமது அடுத்த தலைமுறைக்கு சொத்து சேர்ப்பதைப்போல, இயற்கையையும் பாதுகாத்து சேர்த்து வைப்போம்.

இயற்கை வளங்களின் இன்றியமையாமை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்க, ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 5-ஆம் நாள் உலக சுற்றுச்சூழல் தினம் கடைபிடிக்கப்படுகிறது. இந்த நாளில், இயற்கையைப் பாதுகாக்க நம்மால் ஆனதைச் செய்வோம். அதுவே, இந்த நாளுக்கான, நம் இறைவனுக்கான நமது மரியாதை.



முனைவர் சி. ஜாக்சன்



(சுற்றுச்சூழல் தினம்)

# இயற்கையோடு உறவாடி, இறையருளைப் பெறுக!

இயல்பாகத் தோன்றிமறையும் பொருட்கள் அவற்றின் இயக்கங்கள் அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் ஆகிய அனைத்தையும் இயற்கை என்கிறோம். இப்படைப்பு கடவுளால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட வெகுமதி, அரும்பெரும் சொத்து.. எல்லா உயிரினங்களையும் தன் மடியில் தாங்கிக் கொள்ளும், எழில் நிறைந்த தாய் இயற்கை. இது அன்பு என்னும் உறவுக் கட்டுகளால் பிணைக்கப்பட்டிருக்கிறது. இந்த உறவு மனிதர்கள் பிற உயிர்களோடு உறவு கொள்ளத் தூண்டுகிறது. படைப்பில் இறைவன் உறைந்திருக்கிறார் என்பதை நாம் கண்டுணர வேண்டுமென்றால், முதலில் நம் உள்ளங்களில் உறைந்திருக்கும் இறைவனை நாம் கண்டுணர்ந்து, பிறர் உள்ளங்களை அன்பு செய்ய முடியும்.

திருத்தந்தை பிரான்சிஸ் 2015ஆம் ஆண்டு ஜூன் 18ஆம் நாள் வெளியிட்ட "புகழனைத்தும் உமதே" (Laudato Si') என்னும் சுற்றுமடலில் நம் பொது வீட்டை (பூமி) மறுபடியும் கட்டியமைக்க, மக்கள் அனைவரும் ஒன்றுகூடிச் செயல்பட வேண்டும். கடவுளின் படைப்பனைத்தையும் பாதுகாக்க முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் (எண்: 13-14) என்றும், மேலும் "Fratelli Tutti" (அனைவரும் உடன் பிறந்தோர்), "Laudate Deum" - "கடவுளைப் புகழுங்கள்" எனும் திருத்தூது மடல்கள் வாயிலாக சுற்றுசூழல் பிரச்சனைகளில் நாம் தெளிந்த பார்வை கொண்டிருக்க வேண்டும் எனவும், இதில் தீர்வு காண்பது நமது கடமை எனவும் தெளிவுபடுத்துகிறார்.

நாம் வாழும் பூமி பல சவால்களை எதிர்கொள்ளத் தொடங்கியபின், இந்த பூமியில் நிலவி வரும் சுற்றுச்சூழல், காற்று மாசு, இயற்கை வளங்கள், நீர்நிலைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், எண்ணெய்க் கசிவு, புகை, மாசுபட்ட ஆறுகள் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 5ஆம் நாள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம் கொண்டாடப்படுகிறது. 1986ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டது.

பூமியின் கட்டமைப்பில் மனிதன் மட்டுமின்றி எல்லா உயிரினங்களும் அதனதன் இடங்களில் வாழ்ந்தன. மனிதனின் பேராசையால் காடுகள் அழிக்கப்பட்டு விலங்குகளின் உறைவிடங்கள் அபகரிக்கப்பட்டன. உயிரினங்கள் அழிவால் பூமி வெப்பமடைகின்றது. வேகமாக உருகி வரும் பனிப்பாறைகள் பல்வேறு பனிக்கரடிகளின் வாழ்வாதாரத்தைப் பாதித்து, இனப் பெருக்கத்தைத் தடுக்கின்றன. தண்ணீர் பற்றாக்குறையால் உலகம் முழுவதும் சுமார் 10 லட்சம் குழந்தைகள் பிறந்த அன்றே உயிரிழப்பதாக ஐ.நா. குழந்தை நல நிறுவனம் (யுனிசெப்) அறிக்கை வெளியிடுகிறது.

"நீரின்றி அமையாது உலகம்".

இராசாயனக் கழிவுகள், சாயக் கழிவுகள், பிளாஸ்டிக் பை போன்றவற்றால் நீர் அசுத்தப்படுத்தப்படுகிறது, "காவிரியைக் கடந்தேன் ஒட்டகத்தின் மேல்" என்ற கவிதைக்கேற்ப மழை நீர் சேமிப்பு இல்லாமல் வறட்சி நிலவுகிறது.

தமிழ்நாட்டில் மீத்தேன், ஹைட்ரோகார்பன் போன்ற திட்டங்களை எதிர்த்து நீண்ட காலமாக நடைபெற்ற போராட்டங்களைப் போல இல்லாமல் மூன்று மாதங்களுக்குள்



அரியாப்பட்டி டங்ஸ்டன் ஏலத்தை இரத்து செய்ய வலியுறுத்தி தமிழக சட்டப் பேரவையில் டிசம்பர் 9 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனைத்துக் கட்சி ஆதரவுடன் ஒன்றிய அரசுக்கு அனுப்பப் பட்டு தீர்வு கிடைக்கக் காரணம் மக்கள், சமூக ஆர்வலர், விவசாயிகள், சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஒற்றுமை உணர்வுடன் போராடியதே. “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” “ஒற்றுமையே பலம்” என்ற தமிழர்களின் வரலாற்று அனுபவத்தை நமக்கு கற்றுத் தந்துள்ளது.

நுகர்வுக் கலாச்சாரத்தால் செயற்கைப் பொருட்கள், பூமியைக் குப்பைத் தொட்டியாக மாற்றுகின்றன. குப்பையைத் தூக்கி எறியும் கலாச்சாரம் விரட்டியடிக்கப்பட வேண்டும். சூரியக் கதிர்கள் நேரடியாக பூமியின்மீது விழாதவாறு ஓசோன் படலம் தடுத்து நம்மை பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றுகின்றது. குப்பைகள், கழிவுப் பொருட்கள், வாகனப் புகை இவற்றின் வாயுக்கள் ஓசோன் படலத்தை மாசுபடாமல் காக்க வேண்டும். “அடக்கி ஆளட்டும்” என்ற விவிலியச்சொல் பாதுகாப்பது, அரவணைப்பது, படைப்பது, உருவாக்குவது என்ற பொருளைக் கொடுக்கின்றது. மரங்களை வெட்டக்கூடாது இணைச்சட்டநூலில் (20:19) விவிலியம் இயம்புகிறது. சமத்துவம் படைப்பது, சகோதரத்துவ வாழ்வு, ஏழைகளை உயர்த்துவது என்ற அறச்செயல்களோடு கடவுளின் அன்பையும் படைப்பாற்றல் திறனையும் கண்டு வளரும் தலைமுறையினர் கடவுளைப் போற்றிப் புகழ வேண்டும்.

“மண்ணுலகில் குடியிருப்போர் செய்த
தீமைகளின் காரணமாக, விலங்குகளும்,
பறவைகளும் அழிந்து போயின” (எரே. 12:4)

தொழிற்சாலைக் கழிவுகளைக் குறைக்க வழி செய்ய வேண்டும். வாகனங்களின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும். காடுகளை அழிப்பதை நிறுத்த வேண்டும். நிலக்கரி எரிப்பு கட்டுப்படுத்துதல், உழவுக்கு இராசாயன உரங்களைக் குறைத்து இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல், பேராசை விடுத்து உண்மையோடும், நேர்மையோடும் வாழ்தல், குடிநீரை வீணாக்குவதைத் தடுத்தல், மறுசுழற்சி முறையில் குப்பைகளை சீராக்குதல் போன்றவற்றுடன் ஆரோக்கியமான புது உலகை கட்டியெழுப்புவது யூபிலி ஆண்டின் புது முயற்சியாக இருக்கட்டும். இதையே திருத்தந்தை பிரான்சிஸ் அடிக்கடி அறிவுறுத்தினார். நம்மால் முடிந்ததைச் செய்து, புவியைப் பாதுகாத்து, **இறைவன் உறையும் இன்ப வனமாக** மாற்றி, புத்துயிர் பெறுவோம்!

“இயற்கையைக் காப்பதும் இறைவழிபாடே”

இறைமகன் இயேசு பிறந்ததும், செபித்ததும், போதித்ததும் இயற்கை சூழ்நிலையில்தான். (மத் 4:18) இயற்கையோடு இணைந்து இறைபுகழ் போற்றும் புனித பிரான்சிஸ் அசிசியார் பறவைகளுக்குப் போதித்தார். “கதிரவன் கவிதை” என்ற அவரது படைப்பில் சூரியன், சந்திரனைத் தன் சகோதரிகளாக அழைத்து, தன் அன்பை வெளிப்படுத்துகிறார்.

“மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச்செய்து, விதைப்பனுக்கு விதையையும், உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்குத் திரும்பிச் செல்வதில்லை” (எசா 55:10).

சுயநலமின்றி, என்றும் இயங்கிக் கொண்டே இருக்கும் இயற்கையே நமக்கு சிறந்த பாடமாக அமைகிறது. நம் வருங்கால தலைமுறையினருக்கு இயற்கையின் அளப்பரிய நன்மைகளை எடுத்தியம்பி, சுற்றுச்சூழல் மாசு இல்லாமல் பாதுகாத்து, கடவுளின் கைத்திறனைக் கண்டு அவரைப் போற்றுவது சிறந்த அறச்செயலாகும்!



ரோஸ் சேவியர்

# விசா ப்ளீஸ், மோட்சம் செல்ல!



பேராலய வளாகத்தில் உச்சி வெயிலின் தாக்கத்தைத் தன் புடவைத் தலைப்பால் மூடி மறைத்துக் கொண்டு லூர்து மாதா கெபி அருகே சென்ற அலுவலகப் பணிப்பெண், ஆலய வாயிலில் நின்று கொண்டிருந்த தன் பால்ய சிநேகிதி லதாவை ஆச்சர்யத்துடன் பார்த்தாள்.

"என்ன, இந்நேரம் இங்கே?"

"எல்லாம் வேண்டுதலுக்குத்தான்!"

"உங்களுக்கு என்ன பிரச்சனை?"

"எனக்கு ஒன்றுமில்லை. பனிமய அன்னை என்னை, என் குடும்பத்தை நன்றாகத்தான் வைத்துள்ளார். தெரிந்தவர் குடும்பத்திற்காகத்தான் இந்த உச்சி வெயிலிலும் பனிமயத் தாயிடம் மன்றாடிவிட்டு வருகிறேன்."

"அடுத்தவரின் பிரச்சனை எப்படி உன் காதுக்கு வந்தது?"

"சென்ற வாரம் மரியாயின் சேனை சார்பாக முதியோர் இல்லத்திற்குச் சென்று செபித்துவிட்டு ஒரு சில முதியவர்களை சந்தித்து ஆறுதல் வார்த்தைகள் பேசிவிட்டுப் புறப்படத் தயாரானோம். அப்போது 'லதா நீயா? எப்படிம்மா இருக்கிறாய்?' என்று குரல் கேட்டு, குரல் வந்த திசையை நோக்கி உறுப்பினர்கள் உட்பட நான் திரும்பிப் பார்த்தேன். தயாளன் நின்றுகொண்டிருந்தார். அருகே வந்த அவர் உறுப்பினர்களிடம், 'இந்த லதா நல்ல பொண்ணும்மா. குடிவெறியிலிருந்த என்னை, செபமாலை சொல்ல வைத்து, நல்ல மனிதனாக மாற்றியவள்."

"நீங்க எங்கே இங்கே? வேலை பார்க்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"இல்லம்மா, இளமையோடு இருக்கும்போது கிடைத்த பணத்தையெல்லாம் சேமிக்காமல் குடித்து வீணாக்கிவிட்டேன். வயதானபோது கையில் காசு இல்லாததால் இங்கு சேர்க்கப்பட்டேன். சரிம்மா எல்லாரும் உனக்காகக் காத்திருக்கிறார்கள். போய் வாம்மா?"

"யாரு சகோதரி இவர்?"

"நல்ல குடும்பத்துப் பையன்தான். சின்ன வயதில் பீடச் சிறுவனாக ஆலய நிகழ்வுகளில் தினசரி பங்கேற்று வந்தவர்தான். இவருக்குப் போய் இந்த நிலைமை? நம்ம ஆலயத்திற்குத் தினசரி காலைத் திருப்பலிக்கு மேக்கப்போடு வருவாளே?"

"யாரு? அந்த ஷோபனாவா?"

"ஆங், அவளுடைய அண்ணன்தான் இவர்! படித்த மாப்பிள்ளையாக பார்த்துப் பார்த்துத் திருமணம் செய்து வைத்தார்."

"அப்ப, நீங்க முதன்முதலில் பார்த்த சகோதரி யாரு?"

"அவங்க ரதியக்கா. ஷோபனா வீட்டுக்காரருடைய அக்கா! கணவர் சிறுவயதில் இறந்துவிட்டார். உறவினர்கள் ஒண்டிக்கட்டைக்கு என்ன பணம் வீடு, என்று அனைத்தையும் எடுத்துக்கொண்டு, இங்கே விட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள்." ஆலய வளாகத்தில் தோழியிடம் விடைபெற்ற லதா, நேராக ஷோபனாவின் இல்லத்திற்குச் சென்றாள்.

"வாங்க ஜெப வீராங்கனை லதா அவர்களே!"

"நேத்து முதியோர் இல்லம் சென்றிருந்தேன்."

"என்ன, உன்னையும் உன் குடும்பத்தார் அங்கே சேர்க்கப் போகிறார்களோ?"

"இல்ல, மரியாயின் சேனை உறுப்பினர்களுடன் செபித்து, உரையாடச் சென்றிருந்தோம்."

"நீங்க செபித்ததற்கு என்ன கொடுத்தார்கள்?"

"முதியோர் இல்லத்திற்கு நாமதான் கொடுக்கனும். சிலர் பணம், பொருள் கொடுப்பார்கள். வேறு சிலர் தங்கள் உறவினரைக் கொடுப்பார்கள்."

ஷோபனாவின் முகம் பேயறைந்தது போலாகிவிட்டது. "உங்கள் செபவாழ்வுக்கு வரவேற்பு எப்படி?"

"நல்லாத்தான் இருக்குது. ஆனால், நம்ம மக்களுக்கு, மோட்சம், நரகம் என்ற இறுதித் தீர்ப்பு பற்றிய கவலையே இல்லாமல்தான் இருக்கிறார்கள்."

"எப்படி சொல்கிறாய்?"

"உங்க அப்பா அம்மா இப்ப எங்கே இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? அதாவது மோட்சத்திலா, நரகத்திலா?"

"அது அவங்க அவங்க வாழ்ந்த வாழ்க்கை முறையின்படிதானே நடக்கும்! அது சரி, உங்க பெற்றோர் எங்கே?"

"அவர்கள் கண்டிப்பாக மோட்சத்தில்தான் இருப்பார்கள். ஏனெனில், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை மற்றும் எங்களை வளர்த்த வளர்ப்பு அப்படி! நீங்க, உங்க கணவர் இருவரும் இவ்வுலக வாழ்க்கை முடிந்தபின் எங்கே செல்வதாக உத்தேசம்?"

"எல்லாரும் மோட்சம்தானே விரும்புவார்கள்? அதிலென்ன சந்தேகம்?"

"எப்படி வாழ்ந்தாலுமா?"

"புரியவில்லையே?"

"உங்க அண்ணன், உங்க வீட்டுக்காரரின் அக்கா இருவரும் முதியோர் இல்லத்தில். நீங்கள் இருவரும் அதுபற்றி சிறிதும் கவலையின்றி ஆடம்பரமாக வாழ்ந்து வருகிறீர்களே? உங்களுக்கு மோட்சம் கிடைக்குமா?"

"இப்படியே எல்லாரும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் இவ்வுலகத்தில் நரக வாழ்க்கைதான் வாழ வேண்டியதிருக்கும். நாம உண்டு, நம்ம குடும்பம் உண்டு என்று இருந்தால், இவ்வுலக வாழ்க்கையே சொர்க்கமாக அமையும். நாளைக்கு என்ன நடக்கும் என்பதைப் பற்றி, ஏன் இப்பொழுதே கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்! உங்களுக்குப் பொழுது போகவில்லையென்று செபம் என்ற போர்வையில் ஊர் சுற்றி வருகிறீர்கள். எங்களாலெல்லாம் அவ்வாறு செய்ய முடியாது. இறுதி நாளில் எல்லாருக்கும் கிடைக்கிறதுதான் எங்களுக்கும் கிடைக்கும்."

மீண்டுமாக பேராலயத்திற்கு வந்த லதா, பீடத்தின் முன்பாக முழந்தாள்படியிட்டு செபிக்கலானாள். "பனிமயத் தாயே, 'நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார்' (யோவா 14:12) என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே சொல்லியிருக்கிறாரே அம்மா! முதியோர் இல்லத்தில் இருக்கிற அந்த இருவருக்காகவும், அவர்களின் குடும்பத்திற்காகவும் மன்றாடுகிறேன் தாயே! உமது இரக்கம் நிறைந்த பார்வையை அந்தக் குடும்பங்களின்மேல் ஒரு நிமிடம் திருப்பும் அம்மா! வெகுசீக்கிரம் அந்தக் குடும்பங்களில் நல்ல மனமாற்றத்தை ஏற்படுத்தும் அம்மா!" என்று கண்ணீரோடு செபித்தாள் லதா.

அடுத்த சனிக்கிழமை மாலையில் பனிமய அன்னையின் திருஉருவம் தாங்கிய சப்பரத்தின் முன் நின்று கொண்டிருந்த ஒருவர் தன்னை நோக்கிக் கரம் அசைத்துக் கூப்பிடுவதை உணர்ந்த லதா, அருகே சென்றாள். அது வேறுயாருமில்லை, தயாளன்தான். "பனிமய மாதா கண்ணைத் திறந்துவிட்டார்கள் லதாம்மா" என்று நன்றியோடு கைகூப்பினார். பீடத்திற்கு முன்பாக பனிமயத் தாய்க்கு நன்றி சொல்லச் சென்றவள் தன்னை பின்னால் இருந்த பெண்மணி தொடுவதை உணர்ந்துத் திரும்பிப் பார்த்தாள். நீலநிற புடவையுடன் ரதியக்கா புன்னகை தவழப் பார்த்தாள்.

இருவரையும் நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்ததற்காக பனிமயத் தாய்க்கு நன்றி சொன்னாள், லதா. இப்போது அவளது கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கியது.

ஆலயத்திலிருந்து மகிழ்ச்சிப் பெருக்கோடு வந்தவளை, "லதாம்மா அடுத்த மாதம் முதல் சனிக்கிழமை எங்கள் இல்லத்திற்கு செபிக்க உங்கள் மரியாயின் சேனை உறுப்பினர்களுடன் வாருங்கள்" என்று ஷோபனா இன்முகத்துடன் அழைத்தாள். மாடிபோர்ஷனை அண்ணனுக்கும், கீழே உள்ள சைடுபோர்ஷனை அவர் அக்காவுக்கும் கொடுத்து விட்டதாகவும் முழுமையான மனமாற்றத்துடன் அறிவித்தாள்.



ம. வெனான்சியுஸ்

# முதுமையைக் கொண்டாடுவோம்



கண்ணாடி முன்நின்று சற்று நேரம் உங்களை உற்றுப் பாருங்கள். இது முதியவர்களுக்கான ஒரு பயிற்சி. நரைத்த தலைமுடி. சுருக்கம் விழுந்த கண்கள், தளர்வுற்ற தேகம். இவைதாம் நம் கண்முன்னே தெரிகின்றன. ஆனால் நவீன உலகம் இதெல்லாம் உங்களுக்கு வேண்டாம். இளமையுடன் தோற்றமளிக்க, இந்தப் பொருட்களையெல்லாம் உபயோகியுங்கள் என்று விளம்பரப்படுத்தி, முதுமையை வேண்டாத பருவமாக எண்ண வைக்கின்றது. ஆனால் நீதிமொழிகள் நூல் 16:31 கூறுகிறது, நரைமுடி மதிப்பிற்குரிய மணிமுடி. அது நேர்மையான நடத்தையால் வரும் பயன் என்று. முதுமைப் பருவம் எய்த உடன் இறைவன் நம் வாழ்வை முடித்துவிடுவதில்லை. நம் முதுமையில் அவர் இன்னும் அதிகமாக நம்மிடம் எதிர்பார்க்கின்றார்.

ஒவ்வொரு தழும்பும், சுருக்கமும், நரைமுடியும் இறைவன் நம்மை இன்றுவரை எப்படி வழிநடத்தி வந்திருக்கிறார் என்பதை இவ்வுலகிற்கு எடுத்துக்கூறும் அடையாளங்கள். கடந்த நாட்களில் ஒவ்வொரு மாதமும் நாம் எதிர்கொண்ட பொருளாதாரச் சிக்கல்களில், இறைவன் நம்மை எவ்வாறு தாங்கிக் கொண்டார். எழுந்த உறவுச் சிக்கல்களிலிருந்து எவ்வாறு மீட்டுக் கொண்டார், நம் பிள்ளைகளின் கல்வியில், வேலை வாய்ப்பில் எவ்வாறு நமக்குத் துணை நின்றார் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்தால், இன்று நாம் அடைந்திருக்கும் உயர்வுக்கு நன்றி சொல்லவே ஆயுள் போதாது.

இத்தகைய இறை வழிநடத்துதலை, இன்றைய தலைமுறைக்கும் சுற்றத்திற்கும், சமுதாயத்திற்கும் நாம் எடுத்துக் கூறவேண்டிய தருணம் இது. இறைவன்மீது கொண்ட நம்பிக்கை, நாம் அமிழ்ந்து போய்



விடுவோமோ என்ற சூழலில், எவ்வாறு நம்மைக் கரை சேர்த்தது என்பதை எடுத்துக் கூறுவதற்கு இறைவன் கொடுத்த வாய்ப்பே இந்த முதுமை. இதை நம்பிக்கையுடன் எடுத்துக் கூறினால்தான், அடுத்த தலைமுறை, இறைநம்பிக்கையிலும், இயேசு கிறிஸ்துவின் அன்பிலும், அன்னை மரியாவின் பரிந்துரையிலும் நம்பிக்கை கொண்டு வாழ்க்கைப் பயணத்தை எதிர்கொள்ளும்.

யோபு 12:12இல் வாசிக்கிறோம். “முதியோரிடம் ஞானமுண்டு, ஆயுள் நீண்டோரிடம் அறிவுண்டு” என்று இந்த ஞானமும், அறிவும் நமது பிள்ளைகளுக்கு, சமூகத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். இறைவனோடு இத்தனை ஆண்டுகள் பயணித்ததால், நாம் பெற்ற ஞானம், நம்மோடு முற்றுப் பெறக்கூடாது. நமது முதுமை வாழ்வு, இளம் தலைமுறைக்கு வாழ்க்கைப் புயலைக் கடக்க உதவும் கலங்கரை விளக்கமாய் இருக்க வேண்டும்.

இளமையில் உலக செல்வங்களைச் சேர்க்க ஓடினோம். பதவிக்காக நாயாய் அலைந்தோம். அதிகாரப் போதையில் எதற்கும் துணிந்து செயல்பட்டோம். முதுமை நமக்கு இவையாவும் நிலையற்றது என்பதை உணர்த்துகிறது. பிலிப்பியர் 3:7இல், புனித பவுல் கூறுவதுபோல, 'என் ஆண்டவராகிய இயேசுவைப் பற்றிய அறிவே. நான் பெறும் ஒப்பற்ற செல்வம்' என்பதைக் கண்டு கொள்ளும் பருவம் முதுமை.

வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும், கிறிஸ்துவைக் கண்டுகொள்வது, முடிவில் கிறிஸ்துவைப் போலவே மாறுவது என்பதே, மனிதராய்ப் பிறந்ததன் நோக்கம் என்பதைக் கண்டு கொள்ளும் காலம் முதுமை. திருப்பாடல் 78:4இல் வாசிக்கிறோம்.... ‘வரவிருக்கும் தலைமுறைக்கு ஆண்டவர் ஆற்றிய வியத்தகு செயல்களை எடுத்துரைப்பேன்’ என்று. ஆபிரகாம் ஈசாக்கைத் தன் கரத்தில் ஏந்தியபோது, அவருக்கு வயது 100. அடிமைப்பட்டுக் கிடந்த இஸ்ரயேலரை மீட்பதற்கு, மோசேயை இறைவன் தேர்ந்து கொண்டபோது அவருக்கு வயது 80. இப்போது,, நம் தாய்த்திருஅவையை வழிநடத்தத் தேர்ந்துகொண்ட திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள் வயது 70. திருப்பாடல் 71:18 கூறுகிறது, ‘கடவுளே உம் கைவன்மையையும், ஆற்றலையும் இனிவரும் தலைமுறைக்கு நான் அறிவிக்குமாறு, வயது முதிர்ந்த, முடி நரைத்துவிட்ட என்னைக் கைவிடாதேயும்’ என்று. இறைவனின் கைவன்மையையும், ஆற்றலையும் இனிவரும் தலைமுறைக்கு எடுத்துக் கூறுவதே முதியவர்களின் தலையாய கடமையாக இருக்க வேண்டும்.

நமது வாழ்வு, இறைவனை நம் கண்முன் நிறுத்திய இயேசுவின் வாழ்வைப் போல் மாற வேண்டும். இயேசுவை முழுமையாக அறியும் அறிவு ஒன்றுதான். நாம் மானிடப் பிறவி எடுத்ததன் உண்மையான நோக்கம் என்பதை நாம் வாழும் சமூகத்திற்கு அறியச் செய்வதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். இந்நிலையை அடைய, நாம் எதைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில் எசாயா 46:4இல் இறைவனே கூறுகின்றார் : ‘கருவிலிருந்தே உங்களைச் சுமப்பவர் நான். உங்கள் முதுமை வரைக்கும் நான் அப்படியே இருப்பேன். நரை வயது வரைக்கும் நான் உங்களைச் சுமப்பேன். உங்களை உருவாக்கிய நானே, உங்களைத் தாங்குவேன். நானே உங்களைச் சுமப்பேன். நானே விடுவிப்பேன்’ என்று.

இத்தகைய ஆறுதலான வார்த்தை, நமது முதுமையைக் கொண்டாடத்தானே நம்மை அழைக்கிறது.



**M. பவுல் ராஜ்**



# மாசு படிந்த பூமி

ஒரு ஓவியர் 'கடைசி இரவு உணவி'ன் படத்தை வரையத் தொடங்கினார். முதன் முதலில் மாசற்ற ஒரு குழந்தையை மாதிரியாகக் கொண்டு இயேசுவின் திருமுகத்தை வரைந்தார். பிறகு திருத்தூதர்களுக்காக பல மனிதர்களைத் தேடி, அவர்களின் முகங்களையும் வரைந்து விட்டார். இறுதியாக யூதாசின் முகத்தினை வரைய, பல ஆண்டுகள் தேடியும் எவரும் கிடைக்கவில்லை. ஒருநாள் ஒரு மதுபான விடுதியில், மதுபானத்திற்காகப் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த ஒருவனைக் கண்டார். அவன் முகம் யூதாசுக்குப் பொருத்தமாக விகாரமாக, பாவம் மொத்தமும் வெளிப்படும் விதமாக இருந்தது. அவனைத் தன் இருப்பிடத்திற்கு அழைத்து வந்து படம் வரைந்து கொண்டிருந்தார். அப்போது அம்மனிதன், பல ஆண்டுகளுக்கு முன் தான் இயேசுவின் முகத்துக்கு 'மாதிரி'யாக இருந்ததை நினைவுகூர்ந்தான். தன் தற்போதைய நிலையை எண்ணி வருந்தி மனம் திரும்பினான்.

இன்று நம் பூமியும் மாசு நிறைந்ததாக இருக்கிறது. தொழிற்சாலைகளிலிருக்கும் கழிவுகள் நீரை மாசுபடுத்துகின்றன. வாகனங்கள் ஒலி எழுப்பி அமைதியைக் குலைக்கின்றன. வேதிப் பொருட்கள் மண்ணை மாசுபடுத்தி, உணவையும் விஷமாக்குகின்றன. அலைபேசியின் கதிர்வீச்சுகள் கண்களை மாசுபடுத்துகின்றன. லஞ்சமும் ஊழலும் நேர்மையினை மாசுபடுத்துகின்றன. வலைத் தளங்களோ மனித உள்ளங்களையே மாசுபடுத்தி பல்வேறு தவறான வாழ்க்கை முறைகளுக்கு வித்திட்டுக் கொண்டிருக்கின்றன. மொத்தத்தில் நாம் வாழும் பூமியோ மாசு படிந்த பூமி.

பிறந்திருந்தபோது நம்மில் இறைவன் குடியிருந்தார். ஆனால் வளர, வளர நம்மை சூழ்நிலைகள் மாற்றி, நம்மைப் பாவ வாழ்விற்கு இழுத்துச் செல்ல செல்ல, நம்மில் உறைந்திருக்கும் இறைவன் மெல்ல மெல்ல விலகிச் செல்கின்றார்.

குழந்தையாக இருக்கும்போது இயேசுவாக வரையப்பட்டவன், பெரியவனாகிய பிறகு யூதாசாக வரையப்படுகின்றான்.

நமது உலக வாழ்விலும் பலருக்கு இந்த நிலைதான். என்றும் குழந்தை மனம் கொண்டவர்களாக மாசின்றி நாம் வாழ வேண்டுமென்றால், இறைவன் நம்மோடு, நம்முடனே, நம்மில் வாழ்கிறார் என்பதை உணரவேண்டும். இறைவன் நம்மை விட்டு விலகிவிடாதபடி அவரைக் கெட்டியாகப் பிடித்து இறைவழியில் வாழும்போது 'அலகை' நம்மை அசைக்க முடியாது. இறையோடு வாழ்வோம். இறையனுபவம் நம்மில் ஓங்கிட, இறையன்பில் பேரின்பம் அடைவோம்.



ஜோ. ரெஜினா கிரகோரி



# வெட்கப்பட்டுப் போவதில்லை



பிள்ளைகளே, கடவுள் ஒருபோதும் உங்களைக் கைவிடமாட்டார். நீங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை. ஆபிரகாமின் வாழ்க்கையைப் பாருங்கள்! அவர் கடவுள்மேல் நம்பிக்கை வைத்து தன்னுடைய சொந்த ஊரைவிட்டுப் புறப்பட்டு, கடவுள் காண்பித்த தேசத்திற்குச் சென்றார். அவர் வெட்கப்பட்டுப் போனாரா? ஒருபோதும் இல்லை.

இரண்டாம் உலகப்போர் கடுமையாக நடந்துகொண்டிருந்தபோது, சிறு பிள்ளைகளை லண்டன் நகரத்திலிருந்து பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லும்படி அரசு கட்டளையிட்டது. அதன்படி பிள்ளைகளை தனி வண்டியிலே ஏற்றிச் சென்றார்கள். பெற்றோருக்கு அது வேதனையாயிருந்தது. பிள்ளைகளைப் பிரிகிறோமே, மீண்டும் அவர்களை சந்திப்போமா, போரின் நிலை என்னவாகுமோ என்று கண்கலங்கி நின்றார்கள்.

அதில் ஒரு சிறுமி தன் தாயின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீரைத் துடைத்து, "அம்மா, நாங்கள் எங்கே போகிறோம் என்றும், எப்பொழுது திரும்புவோம் என்றும் தெரியாது. ஆனால், நம் கடவுள் எல்லாவற்றையும் பொறுப்பெடுத்திருக்கிறார். நாம் வெட்கப்பட்டுப் போவதேயில்லை" என்றாள். அந்த சிறுமியினுடைய வார்த்தை அந்தத் தாயின் உள்ளத்தை மிகவும் ஆறுதல்படுத்தியது.

யோபுவின் வாழ்க்கையை வாசித்துப் பாருங்கள். எத்தனை வேதனைகள்! எத்தனை பாடுகள்! அவருடைய உடல் வியாதி, அவரை எங்கே இழுத்துச் செல்லுகிறது என்று அவருக்குத் தெரியாத நிலையிலும், "ஆயினும் நான் போகும் வழியை அவர் அறிவார்: என்னை அவர் புடமிட்டால், நான் பொன்போல் துலங்கிடுவேன் (யோபு 23:10) என்றார். கடவுள் யோபுவை வெட்கப்பட ஒப்புக் கொடுக்கவில்லை. சாத்தான் எவ்வளவோ சோதித்துப் பார்த்தான். கடவுள் யோபுவின் முன்னிலையைப் பார்க்கிலும், பின்னிலைமையை இரட்டிப்பாய் ஆசீர்வதித்தார்.

பிள்ளைகளே, கடவுள் இன்று உங்களை அன்போடு பார்த்து, "நீங்கள் வேண்டிய மட்டும் உண்டு நிறைவடைவீர்கள்: உங்களை வியத்தகு முறையில் நடத்தி வந்த உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் பெயரைப் போற்றுவீர்கள்: இனிமேல் என் மக்கள் ஒருபோதும் நிந்தைக்கு உள்ளாக மாட்டார்கள்" (யோவேல் 2:26) என்கிறார்.

கடவுள் உங்கள் பகைவர்களுக்கு முன்பாக உங்களுக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, உங்கள் தலைக்கு எண்ணெய் பூசுகின்றார். நீங்கள் வெட்கப் பட்டுப் போவதேயில்லை. திருவிவிலியம் "உம்மை அவர்கள் நம்பினார்கள். ஏமாற்றமடையவில்லை" (திபா 22:5) என்கிறது.

கடவுள் அன்புள்ளவர்தான். உங்களை நேசிக்கிற தகப்பன்தான். தாய் தேற்றுவது போல் உங்களைத் தேற்றுகிறவர்தான். அதே நேரத்தில் அவர் மிகவும் கண்டிப்புள்ளவர். ஆகவேதான், திருப்பாடல்களில் "பயத்துடனே அவரை சேவியுங்கள். நடுக்கத்துடனே அவரைப் பின்பற்றுங்கள்" என்று கூறப்பட்டுள்ளது. நீங்கள் அப்படி நடக்கும்போது நன்மைகளும் மேன்மைகளும் உயர்வும் உங்களைத் தேடி வந்து அரவணைத்துக் கொள்ளும்.



**S.J. சுரேஷ்**

# பனிமய சாட்சியம்

**126**

## சார்லஸ் சகாய ராஜா, மதுரை

எனது மகன் காட்வினுக்கு I.I.T.யில் நிரந்தர வேலை கிடைக்க வேண்டி பனிமய மாதாவிடம் 2025ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வந்து அழுது மன்றாடிச் சென்றோம். மாதாவின் ஆசியால் 2025ஆம் ஆண்டு மார்ச் 03ஆம் தேதி எனது மகனுக்கு பெங்களூரில் நல்ல நிரந்தர வேலை கிடைத்தது. மாதா இறைவனிடம் பரிந்து பேசி எங்களது வேண்டுதலுக்கு பதில் அளித்தார். எங்கள் குடும்பத்தின் சார்பாக பனிமய மாதாவிற்கு கோடான கோடி நன்றி.

**127**

## மாதாவின் மகன்

சொந்தமாக இடம் வாங்க வேண்டி பனிமய அன்னையிடம் பரிந்துரை செய்தேன். அதன்படியே வில்லங்கமான இடத்தை சரிசெய்து சொந்தமாக வாங்க கிருபை செய்ததற்கு அன்னைக்கு நன்றி தெரிவிக்கிறேன். அந்த இடத்தில் நல்லபடியாக வீடுகட்ட தேவையான உதவிகளை தாய் செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் சாட்சியை பகிர்கின்றேன். மரியே வாழ்க.

**128**

## மாதாவின் மகள்

பனிமயத் தாயிடம் எனது மகள் அந்தோணி பினில்ஷ் திருமண வரன் வேண்டி விண்ணப்பம் எழுதி வைத்தேன். ஒருசில மாதங்களில் திருமண வரன் அமைத்து கொடுத்ததற்கு பனிமயத் தாய்க்கு கோடான கோடி நன்றி.



# விவிலியப் போட்டி 122

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**யூதித்து நூல் அதிகாரம் 1 முதல் 8 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**ஓரிரு வார்த்தையில் விடையளி.**

1. நோன்பிருந்து தங்களையே தாழ்த்திக் கொண்டவர்கள் யார்?
2. அம்மோனியர் யாவருக்கும் தலைவர் யார்?
3. யூதித்து யாருடைய மகள்?
4. இறைப்பற்றுள்ள பெண் யார்?
5. நினிவே நகரில் அசீரியர்களை ஆண்டு வந்த மன்னன் யார்?
6. மனிதரை அச்சுறுத்துவது போல கடவுளை அச்சுறுத்த முடியாது என்று கூறியவர் யார்?
7. யூதித்தின் கணவர் யார்?
8. கடவுளுக்கு மிகவும் அஞ்சி நடந்தவர் யார் ?
9. மெல்கியேலின் மகன் யார்?
10. சிமியோன் குலத்தைச் சேர்ந்த மீகாவின் மகன் யார்?

## விவிலியப் போட்டி 121

**மே 2025**

*விடைக்குறிப்புகள்*

**தோபித்து அதிகாரம் 7 முதல் 14 வரை**

| | | |
|---|---|---|
| I. | 1. தோபியா அவர் மனைவி அன்னாவிடம் | 10:6,7 |
| | 2. இரகுவேல் தோபியாவிடம் | 7:6,7 |
| | 3. இரகுவேல் தோபியாவிடம் | 8:20 |
| II. | 1. கபேல் | 9:5 |
| | 2. 112ஆம் | 14:2 |
| III. | 1. நினிவேயில் இருந்த யூதர்கள் அனைவருக்கும் | 11 :18 |
| | 2. இரபேலின் | 8: 2 |
| | 3. இரபேல் | 8 :3 |
| | 4. காசெரின் | 11 :1 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.06.2025**

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னைப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம்.



**63796 41209** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 204**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 124**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

## பரிசு பெறுபவர்கள் : 4

1. மணல் மாதா அன்பியம் — **வெர்ஜினியா**
2. லூர்து மாதா அன்பியம் — **ரஜூலா ஜான்போஸ்கோ**
3. பனிமயம் அன்பியம் — **சகாயராஜா சகாயராணி**
4. பொம்பெய் மாதா அன்பியம் — **மேத்யூ கர்டோசா**

## பாராட்டுக்குரியவர்கள் : 120

**அந்தோனியார்**
5. ரீனா மொறாயிஸ்
6. சரோஜா
7. ஜெயா
8. லூக்காஸ் சகாயம்
9. சுஜிதா
10. பிருந்தா
11. ஜெசி
12. லீனா

**அன்னை தெரசா**
13. செல்வராணி
14. ரெய்ஸா சுஜய்
15. ஜான்சி ராணி
16. சுகன் மோனிஷா
17. சுரேஷ் பிரேமா
18. ஜோ ரொவினா
19. ஜூலியட்ஸ் ரூபி

**அன்னை வேளாங்கன்னி**
20. கவாஷினி ஆல்வின்
21. டென்சி
22. மிஷல் மிரல்
23. ஆரோன் ஷாரோன்
24. லிசியா ஜெகதீஸ்
25. ஜெரினா செல்வம்

**கிறிஸ்தரசர்**
26. லூரட் வசந்த்
27. செலஸ்கி கிளமென்ட்
28. ரெக்ஸ் கிரீன்வெல்
29. ஜூலியட் சாவியோ
30. ஜெனட்

**தஸ்நேவிஸ் மாதா**
31. அஸ்கேனியஸ் அந்தோணி சாமி

**திவ்ய பாலன்**
32. பிரின்சி
33. சகாயராணி தன்ராஜ்
34. ஸ்டார்லக் ஏஞ்சலின்
35. சென்சிலா சகாயராஜ்
36. ஜோதிஸ்வரி

**பாத்திமா மாதா**
37. ரீனா ராஜா
38. அனு ஆல்வின்
39. ஸ்டெபிரீகன்
40. சுகந்தா ஸ்டெனி

**இரக்கத்தின் மாதா**
41. பாப்டிஸ்டா
42. இருதயம்மாள் கொன்சால்
43. சகாயராணி
44. சேவியர் அம்மாள் கோமஸ்
45. செல்விபுரோ
46. பிரைட்டன் ஜெரோபின்
47. சித்ரா மோத்தா

**ஜெபமாலை மாதா**
48. கல்யாணி செல்வராஜ்
49. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு அன்பியம்**
50. டிரைபேனா
51. கிறிஸ்டோ ஜெபினா
52. டெரன்சியா அரிஸ்டோ

**காவல் தூதர்**
53. சாந்திஆல்ட்ரின்
54. ஜோ ட்ரினிஷா
55. பிரிசில்லா
56. ஜெஸிமா கிளாரன்ஸ்
57. வெனிட்டாள்
58. ரஸ்கின் வசந்தா
59. ஜூலியஸ் டல்மேடா
60. எலிஜா நோவா இம்மானுவேல்
61. சாண்ட்ரா ஜேஃப்ரின்

**குழந்தை தெரசா**
62. பெர்லி டென்சன்
63. பெனி மொறாயிஸ்
64. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**
65. பிரான்சிஸ் வாஸ்
66. மோனிகா செபஸ்டின்
67. எமல்டா

**மணல் மாதா**
68. ரொசாரிகோமஸ்
69. கெயிட்டன் பர்னான்டோ

**லூர்துமாதா**
70. சாண்டினா
71. ஆலிவர் வி. ராயன்
72. ஜெனோசேவியர்
73. ரோஸ்லின் தாமஸ்
74. பிலோகோமஸ்

**மிக்கேல் அதிதூதர்**
75. ஜோஸ்பின்
76. வினோ அந்தோணி
77. ஸ்நோ ஆல்பிரிக்

**பனிமயம்**
78. சுரேஷ் ஆனி
79. மெர்சி;
80. ஜாக்குலின் வினோதினி
81. ராணி
82. ஜூடுரதி
83. அந்தோணிசாமி

**பவுலடியார்**
84. லீமாரோஸ் ஜாய்
85. ராஜா ரோஸ்லின்
86. ஒபிலியாதாமஸ்

**பரிபூரண மாதா**
87. சப்னா கினிஸ்டன்

**பொம்பெய் மாதா**
88. இம்மாக்குலேட் சதீஷ்
89. டிஃபானிஅண்டோ
90. லூடா கான்ஸ்டன்
91. அண்டோ எல்ஃபி
92. தெரேசா பிரகாஷ்
93. லெரின்ஸ் ரொட்ரிகோ
94. ஜான்சிராணி அமல்ராஜ்
95. பெலிக்ஸ் சோபியா

**இராயப்பர்**
96. போஸ்கோ ரெனோ
97. டெய்ஸி
98. ரொமில்டா
99. ஆக்னல் டாஃப்னி

**சவேரியார்**
100. ஜான்சி ஜெயக்குமார்
101. வினிஸ்டா ஷெரின்
102. அனுஷியா பீட்டர்
103. டெலிலா அமலன்
104. ஜென்ஸி ஜோர்னல்

**செபஸ்தியார்**
105. பிரவீனா
106. ரேவதி ரஜூல்டன்
107. ஜெசிலா சேவியர்
108. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**
109. நேசம்
110. ஜூடி ஆரோக்கியராஜ்
111. டோனஸ் ராயன்
112. லாசர் செல்வி

**சிறுமலர்**
113. விஜி சகாயராஜ்
114. எல்சிட்டா ஆனந்தன்
115. செலஸ்டின்
116. விஜிலியா

**சூசையப்பர்**
117. கிறிஸ் ரீஜோ
118. ஹேமலதா
119. காஸ்பின் மோனிஷா
120. ஜெனி
121. ஜாக்குலின்
122. மென்சி

**திருச்சிலுவை**
123. ஜஸ்டின் ஸ்நோகுளோரி

**வியாகுல மாதா**
124. லூர்து லினட்

## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 80

### பரிசு பெறுபவர்கள் : 4

| | |
|---|---|
| 125. திருச்சி | மேத்யூ விவேக் |
| 126. பெரியகுளம் | குழந்தை தெரஸ் |
| 127. யூதாததேயு கோவில் | லூர்து சுவிதா |
| 128. அந்தோணியார் கோவில் | ராணி |

## பாராட்டுக்குரியவர்கள் : 76

**அபுதாபி**
129. சுமிதா
**சென்னை**
130. கமலஜோதி ஜெயசீலன்
131. ரெஜினா கிரகோரி
132. பிரேமா குணசீலன்
**கொடைக்கானல்**
133. ஜெஸிந்தா மார்ட்டின்
**மதுரை**
134. சகோ. ஜான்சிமேரி
135. ஜெஸிந்தா மேரி
**பேட்டை**
136. ஹெலனிட்டா
**ஆறுமுகநேரி**
137. ஜெயராணி
138. தொம்மை அந்தோணி
**வீரபாண்டியன் பட்டணம்**
139. ரேச்சல் ராயன்
**ஆலந்தலை**
140. தங்கராஜ் பொன்சேகா
**உவரி**
141. அர்லின் ஈவ்லின்
**ஏரல்**
142. ஜாய்ஸ் ரெத்னம்
**உடன்குடி**
143. ஸ்நோவின்
**தருவைக்குளம்**
144. லில்லி சோபியா நிக்கோலஸ்
**தேனி**
145. ரொசாரியோ மேரி ஈவ்லின்
**சிவகாசி**
146. ஜெர்லின்
**புதியம்புத்தூர்**
147. ஹெலன் அன்னமனி
**தாராபுரம்**
148. இம்மானுவேல்
**சங்கரன்கோவில்**
149. செல்வமேரி
**கடலூர்**
150. ஹென்றி தாஸ்
**மடத்துக்குளம்**
151. ததேயுஸ் கரோலின்
**கோயம்புத்தூர்**
152. சத்யாசேவியர்
**புன்னைக்காயல்**
153. சகோ. லோராமேரி
**கயத்தார்**
154. அமல்ராஜ்
**ரம்மதபுரம்**
155. மிக்கேலம்மாள்

### தூத்துக்குடி நகர பங்குகள்

**திரு இதயங்களின் பேராலயம்**
156. பீட்டர் ஜெயந்தி
157. மேரி கிரேட்டா ராஜா
158. ரிமோல்டா
159. ரமோலா கமிலஸ்
**குருஸ்புரம்**
160. பௌவுசி ஜோ மைக்கேல்
161. பிளாசி செல்வராஜன்
162. ஜான்சி மெண்டிஸ்
163. ஆசிர்வாதம்
164. டெல்பின்
**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
165. சுகிர்தா
166. டோமினிக்
167. மோட்ச ராணி
168. சகாயம்
**அன்னை வேளாங்கன்னி கோவில்**
169. செக்கரியா சாமுவேல்
170. ஜெஸிந்தா
171. லிஜியா
**யூதா ததேயு கோவில்**
172. சகாயமேரி
173. ஆரோக்கிய சர்மிளா
174. இம்மானுவேல் சேகர்
175. ஜூடி ரீத்தம்மாள் மேரி
176. ரோஸ் சேவியர்
177. ஜெனட் சேவியர்
178. சகாயராஜ் ரொட்ரிக்ஸ்
179. ஷிர்லி
180. பாக்கியசீலி ஹெப்சி
181. பிரான்சிஸ்
**அந்தோணியார் கோவில்**
182. இருதயம்மாள் கபிரியேல்
183. வயோலா ஜான்சன்
184. மகேஷ் சுஜாதா
185. ரீடன்
186. மென்சிலா லொயோலா
**காந்திநகர்**
187. பின்டன் சோஃபியா
188. ரமேஷ் நர்மதா
189. கிளமென்சியா மேக்டன்
190. அன்சிட்டா
191. ரியாலினோ
192. சாந்தினி
193. சரோ ராஜ்
194. பேபி வால்ட்டர்
**பாத்திமா நகர்**
195. ஷர்மிளா ரமேஷ்
196. மேரி ஹம்லின்
**சார்லஸ் கோவில்**
197. சகாயிட்டா மச்சாது
**அண்ணாநகர்**
198. வென்சிராணி
**புனித இஞ்ஞாசியார் கோவில்**
199. அலெக்ஸ் ஜோ ஆனந்த்
200. சகோ. சூசை ரூபி
201. சூசை நெவின்
**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
202. வெர்ஜின்
203. தயாபரராணி
**திரேஸ்புரம்**
204. கோல்பின் ஜேசுராஜ்



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 202**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 204**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 12)

## ஜூன் - 2025

| | | |
|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்பணி. ஸ்டார்வின் |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி. பிரவீன் ராசு |
| களப் பணியாளர் | : | சகோதரர் மைக்கேல் |
| பங்கு அலுவலகம் | : | 0461 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | ஞாயிற்றுக் கிழமைகளில் |
|---|---|---|
| காலை 5.30, 6.30<br>மாலை 5.30 | காலை 5.30, 6.30 திருப்பலி<br>காலை 11.00 செபமாலை, **நவநாள் திருப்பலி**<br>மாலை 5.30 திருப்பலி<br>மாலை 6.30 செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | காலை **5.00, 6.30, 8.00** திருப்பலி<br>காலை **9.30** ஆங்கிலத் திருப்பலி<br>மாலை **5.30** திருப்பலி<br>மாலை **6.30** செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

மற்ற நாட்களில் எந்நேரமும் பங்குத்தந்தையரை அணுகலாம்.

✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)

✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).

✓ புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.

✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30

✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்

✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
மாலை 04.00 மணி - 05.30 மணி

✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.

✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.



## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

1. இந்த ஆண்டுக்கான **விடுமுறை விவிலியப் பள்ளி** 30.04.2025 புதன்கிழமை முதல் 09.05.2025 வெள்ளிக்கிழமை வரை 10 நாள்கள் நடைபெற்றது. 178 குழந்தைகள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். நிறைவுவிழா 09.05.2025 வெள்ளிக்கிழமை மாலையில் அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்றோர்க்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.
2. மே மாதம் 01ஆம் தேதி வியாழக்கிழமை காலை 07.15 மணிக்கு **எஸ்கலின் திருப்பயணிகள் இல்லத்திற்கு அடிக்கல்** நாட்டப்பட்டது.
3. பேராலயப் பங்கு மற்றும் பிறபங்குகளைச் சேர்ந்த 108 இளையோருக்கு 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 05.00 மணித் திருப்பலியில் **மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை** அவர்களால் உறுதிப்பூசுதல் அருளடையாளம் வழங்கப்பட்டது.
4. கடந்த ஓராண்டாக நமது பங்கில் பணியாற்றிய உதவிப் பங்குத் தந்தை **அருள்பணி. பாலன், அருள்சகோதரர் தினகரன்** இருவருக்கும் 18.05.2025 மாலைத் திருப்பலியில் பிரியாவிடை வழங்கப்பட்டது.
5. நமது பங்கின் புதிய உதவிப் பங்குத்தந்தையாக **அருள்பணி. பிரவீன் ராசு,** களப்பணியாளராக **அருள்சகோதரர் மைக்கேல்** இருவரும் பொறுப்பேற்றுள்ளனர்.
6. மாதா தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்காக செபமாலை வழிபாடு 26.05.2025 அன்று நமது பேராலயத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்டது,

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### I. திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 26. | ஏஞ்சல் லிபானா | ட்ரைகாஷ் -வினிஷா | 27.04.2025 | பொம்பெய் மாதா |
| 27. | டார்லா ரைசல் | பிச்சையா - ஆனி | 25.05.2025 | சவேரியார் |
| 28. | காலென் பால் சோரீஸ் | கிளமெண்ட் சோரீஸ்- நிரஞ்சலா | 25.05.2025 | பவுலடியார் |



## வாழ்த்துகின்றோம்

## 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 42. | நஃபானியல் | ஸ்டனிஸ் - விமலி | 10.05.2025 | பவுலடியார் |
| 43. | ஆல்ட்ரிக் தாமஸ் | ராஜ்குமார் - மேக்கின் | 10.05.2025 | திவ்யபாலன் |
| 44. | மேரி அஃபினா | ஆக்னல் -பிரவீனா | 10.05.2025 | சூசையப்பர் |
| 45. | ரேன்டி ரெய்டன் | வினோத்குமார் -ஹெப்சிபா | 18.05.2025 | மிக்கேல் அதிதூதர் |
| 46. | ஆண்டனி அட்ரின் | ஜூலியஸ் -ஜெய ரூபி | 24.05.2025 | அன்னை தெரசா |
| 47. | அன்சினா | ஜூலியஸ் -ஜெய ரூபி | 24.05.2025 | அன்னை தெரசா |
| 48. | அலெக்ஸான்ட்ரியா இன்பா | இன்பஃண்ட் - தீபா | 25.05.2025 | ஜூடு |



## ஆசி கூறுகின்றோம்

## 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 30. | மைக்கேல் ஆண்டனி ஜானி - ஸ்நேகா | ஜூடு | 01.05.2025 |
| 31. | ஜெயந்த் - பிதேலிஸ் அம்ப்ரோஸ் மகிழா | காவல்தூதர் | 04.05.2025 |
| 32. | வளன் ராய் - ராஷ்மி பர்னான்டோ | குழந்தை இயேசு | 04.05.2025 |
| 33. | டென்னிசன் நோவா - ரூபின்சியா | குழந்தை இயேசு | 07.05.2025 |
| 34. | மைவின் கொரைறா - ஜேசு மரிய சில்டேனியா | குழந்தை இயேசு | 14.05.2025 |
| 35. | அல்டோ சாலமோன் மோத்தா - ஜேஸ்மிலின் | சவேரியார் | 15.05.2025 |
| 36. | ஜென்சன் - ஷெர்வினா பி. ராயன் | திருச்சிலுவை | 25.05.2025 |
| 37. | சூர்யா - மரிய ஹேனா | காவல்தூதர் | 28.05.2025 |



## செபிக்கின்றோம்

## 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 43. | அந்தோனி போஸ்கோ | ஹெலினா | 11.05.2025 | திருச்சிலுவை |
| 44. | ஜெயராணி | அல்போன்ஸ் | 15.05.2025 | தஸ்நேவிஸ் மாதா |
| 45. | ஸ்டீபன் பர்னாந்து | ஜெயந்தி | 21.05.2025 | சூசையப்பர் |



## நடைபெறவிருப்பவை

★ 06.06.2025 தலைவெள்ளிக்கிழமை அன்று காலையும், மாலையும் நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

★ 07.06.2025 மாதத்தின் முதல் சனியன்று மாலைத் திருப்பலியும், சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் **அன்பு உணவு** வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி நடைபெறும்.

| எண். | நாள் | செய்தித் தலைப்பு |
|---|---|---|
| 45. | 03.06.2025 | உன்னைத் தாழ்த்து |
| 46. | 10.06.2025 | நம்பிக்கையின் எதிரிகள் |
| 47. | 17.06.2025 | நம்பு! நடக்கும் |
| 48. | 24.06.2025 | அன்பே சிறந்த நெறி |

## வழியனுப்புகிறோம்!



பேராலயப் பங்கின் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றி, பெரியசாமிபுரம் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டிருக்கும் **அருள்பணி. பாலன்,** களப் பணியாளராக சிறப்பாகப் பணியாற்றி, இறையியல் படிக்க திருச்சி செல்லும் **அருள்சகோதரர் தினகரன்** இருவரையும் வாழ்த்தி, வழியனுப்புகிறோம்.



## வரவேற்கிறோம்!





பேராலயப் பங்கின் புதிய உதவிப்பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டிருக்கும் **அருள்பணி. பிரவீன் ராசு,** களப்பணியாளராக நியமிக்கப்பட்டிருக்கும் **அருள்சகோதரர் மைக்கேல்** இருவரையும் அன்போடு வரவேற்கிறோம். பனிமயத் தாயின் திருத்தலத்தில் உங்கள் வாழ்வும், பணியும் சிறக்கட்டும்!


ஃப்ரேஷியா
6ஆம் வகுப்பு
கிராமம்
நகரம்

# அஞ்சலி

# பத்தாம் ஆண்டு நினைவு

"கண்டேன் என் உயிர்க்குயிரான அன்பர்தனை
அவரைச் சிக்கெனப் பிடித்தேன். விடவே இல்லை" (இபா 3:4)



அன்னையின்
மடியில்
**18.12.1933**

அன்பரின்
மடியில்
**29.06.2015**

# J. பெல்சியம்மாள் பர்னாந்து

இவருக்கு முடிவில்லா வாழ்வு ஒன்று உண்டு.
இவரது வாழ்வு உம்மிலே மாறுபட்டுள்ளது என்றும்
இவருக்கு விண்ணகத்தில் நிலையான வீடு உண்டென்றும்
இறைவா நீர் வாக்களித்ததை நம்புகிறோம். ஆமென்.

**நினைவில் மகிழ்ந்து வாழும்**

கணவர் : ம. ஜூலியஸ் தல்மெய்தா

மகன்கள், மருமகள்கள், பேரன் பேத்திகள்

# திருமண பொன்விழா கொண்டாட்டம்

திரு. T. ஜீவன்தாஸ் பெர்னாண்டோ

திருமதி ஆரோ ஜீவன்தாஸ் பெர்னாண்டோ

## இருவரின் ஐம்பதாண்டு அன்பு பயணம்

மண விழா



18.06.1975

பொன் விழா



18.06.2025

50th ANNIVERSARY

மணமகன் தோன்றியது மணவையிலே
மணமகள் தோன்றியது நாகையிலே
திருமணம் இணைத்தது சென்னையிலே
இருமணம் கலந்தது அன்பினிலே!

குடும்பத்தை கோயிலாய் நினைத்தனரே
கும்பிட்டு இறைவனை தொழுதனரே
கலங்கிய காலங்கள் இருந்தாலும்
கடவுளை நம்பி வாழ்ந்தனரே!

அன்பும் பண்பும் கலந்தோங்க
கண்ணியம் காத்து உழைத்தனரே!
ஐம்பதாண்டுகள் பயணத்திலே
அன்பர் பலரையும் இணைத்தனரே!

பொன் விழா கொண்டாடும் பெற்றோரை
பங்கமில்லா பாசத்தோடு வாழ்த்துகிறோம்
நீண்ட காலம் நீரிருவர் வாழ்ந்திடவே
நீங்காத அன்புடனே போற்றுகிறோம்.

எங்கள் மகிழ்ச்சியில் பங்கு கொள்ளுங்கள். எங்கள் பெற்றோர்களுக்காக செபியுங்கள்.

**மகன்கள்**

பிரான்சிஸ் வசந்த் பெர்னாண்டோ

அன்டனி செல்வகுமார் பெர்னாண்டோ

**மருமகள்கள்**

இக்னேஷியஸ் ரியான்ஸி பெர்னாண்டோ

லைஜி பெர்னாண்டோ

**பேரக்குழந்தைகள்**

ஜோஷ்வா ரோஷன் பெர்னாண்டோ

ஷிரின் சஹானா பெர்னாண்டோ

ஷரன் சுகானா பெர்னாண்டோ

No.3, "Deo Gratias", 9th Cross, 1st Right Lane, Ejipura, Bangalore - 560047. Mobile No. 99808 03701

SHINY Ph : 98421 31493